DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw10 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.சிவா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of November 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 CrPC Petititon filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழநத்தம், தெற்கூரில் குடியிருந்து வருகிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, 12.08.2015ம் தேதி இரவு பாளையங்கோட்டை மார்க்கெட் சென்றுவிட்டு எனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் புறப்பட்டபோது என்னுடைய வாகனம் பஞ்சர் ஆகிவிட்டதால் பஞ்சர் கடைக்கு சென்றேன். அங்கு பஞ்சர் கடைக்கு சென்றபோது யாரும்இல்லாததால் வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு ஊருக்கு நடந்து சென்றபோது சாந்திநகர் மணிக்கூண்டு அருகே கீழநத்தம் தெற்கூரை சேர்ந்த ஈசாக் தேவர் மகன் வேணி பஸ்ஸில் டிரைவராக வேலை பார்த்தும், கண்ணன் அவரது இருசக்கர வாகனத்தில் வந்தார். நான் அவரது வண்டியில் ஏறி இருவரும் கீழநத்தம் ரோட்டில் வந்தபோது முறிக்குளம் குளக்கரையின் வடபுறம் உள்ள ரோட்டில் மெட்ராஸ் பதிவு எண் உள்ள டிஎன் 03 –0002 என்ற வெள்ளை நிறக் கார் நின்றுகொண்டிருந்தது. அந்தகார் எதற்காக நிற்கிறது என்று கேட்கலாம் என்று கண்ணன் வண்டியை நிறுத்தி இறங்கி சென்று கேட்டபோது காரின் அருகே 5 நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அதில் ஒரு கன்னியாகுமரிக்கு செல்வதாக அங்கு நின்றுகொண்டிருப்பதாகக் கூறினார்கள். மறுநாள் காலையில் நாங்கள் கார் நிற்பதை பார்த்த இடத்தின் தென்புறம் குளத்தங்கரையில் ஒருவரை கொலைசெய்து காரில் கொண்டு வந்து தலையில்லாத உடலை போட்டு பெட்ரோல் ஊற்றி எரித்திருப்பதாக அங்கே கூட்டம் கூறியிருந்தது என்றும், நான் சென்று பார்த்தபோது தலையில்லாமல் ஒருவரை குப்புறப் போட்டு எரித்துள்ளது தெரியவந்தது. தகவல் தெரிந்து இறந்தவரின் உறவினர்கள் அச்சன்புதூரில் இருந்து வந்து அடையாளம் காட்டியபோது இறந்த நபர் அச்சன்புதூர் அருகில் உள்ள நெடுவயல், சிவகாமிபுரம் காலனியைச் சேர்ந்த செல்லத்துரைத் தேவர் மகன் ராஜகோபால் என்ற சண்டியர் என்று கூறியிருக்கிறேன் என்றும் இப்போது எதிரிகளைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.11.03 16:56:34 +0530